சார்பு நீதிமன்றம், அவிநாசி

**ஓ.எஸ்.எண்.434/2016 நாள்: 01.11.2019**

**வா.சா.1,சாவித்திரி , குறுக்கு விசாரணை :**

நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்து எனக்கு என் அப்பாவின் பூர்வீக சொத்து வகையில் பாத்தியம். என் அப்பா இறந்து சுமார் 27 வருடங்களாகிறது. என் அம்மாவின் பெயர் பழனியம்மாள். அவர் உயிரோடு இருக்கிறார். என் அம்மா இந்த வழக்கில் கட்சியாக சேர்ந்துள்ளார். என் அம்மாவை சேர்க்கவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக கூறகிறேன் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமான பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு படிப்பறிவில்லாததால் அது பற்றி தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பத்திரத்தை தவிர வேறு பத்திரங்கள் என்னிடம் இல்லை. 3 ¾ ஏக்கர் பூர்வீக சொத்து ஆகும். அந்த சொத்துக்கள் அம்மாசை வளையனுக்கு அரசாங்கம் கொடுத்தது. அரசாங்கம் அம்மாசை வளையனுக்கு கொடுத்தற்கு ஆதாரம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அம்மாசை வளையனுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். ரங்கவளையனுக்கு எத்தனை மகன்கள் என்று எனக்கு தெரியாது. பாட்டவளையனுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்கள் முதலிகருப்பன், சிந்தகருப்பன் ஆகியோர்கள் ஆவார்கள். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். சிந்தகருப்பனுக்கு எத்தனை மகன்கள் என்றால் 5 பெண் மக்களும் 1 மகனும் உள்ளனர். அவர்கள் இந்த வழக்கில் கட்சியாக சேரவில்லை. 3 ¾ ஏக்கரும் மானாவாரி பூமியாகும். அந்த பூமியை பொறுத்து அம்மாசைவளையன் இறந்தபிறகு பங்காளிகளுக்குள் எந்த பத்திரமும் கிடையாது. 1948 ஆம் வருடம் யார் யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்றால் ரங்கவளையன், பாட்டவளையன் ஆகிய இருவரும் சேர்ந்து 1 ¼ ஏக்கர் வாங்கினார்கள். அந்த பூமியை ரங்கவளையன் 29.01.1965 ல் ஆசிர்வாதத்திற்கு விற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த 11.05.1972 ல் முதலிகருப்பன் என்பவர் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அது என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்றால் விலை தெரியாது. பத்திரம் உள்ளதா என்றால் பத்திரம் எடுத்துக்கொடுத்துள்ளேன். அவ்வாறு பத்திரம் எடுத்துக்கொடுக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பாட்டவளையன்

வாங்கிய பாகத்தை 1974 ல் சிந்த கருப்பனுக்கு விற்று விட்டது தெரியுமா என்றால் இரண்டு பேருக்கும் பிரித்து கொடுத்துவிட்டார்கள். இரண்டு பேருக்கு பிரித்து கொடுத்தற்கு ஆதாரம் உள்ளதா என்றால் எடுத்துகொடுத்துவிட்டேன். எந்த வருடம் என்றால் எனக்கு படிப்பறிவில்லை. எந்த வருடம் பிரித்துகொடுத்தார்கள் என்றால் தெரியாது. அவ்வாறு பிரித்துக்கொடுக்கவில்லை என்றும் இரண்டாவது மகன் சிந்தகருப்பனுக்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் தவறு. வழக்கு எந்தெந்த காலைகளுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் படிப்பறிவில்லாததால் சர்வே எண்கள் தெரியாது. ஒவ்வொரு காலையிலும் எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் மொத்தம் 20 ஏக்கர் உள்ளது. மொத்தம் 25 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்துக்கள் எல்லாம் எங்கள் குடும்பத்திற்கு எப்படி வந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் கூட்டுக்குடும்பமாக இருந்து விவசாயம் செய்து வாங்கினோம். நான் எந்த வருடம் பிறந்தேன் என்பது தெரியாது. தற்போது எனக்கு 41 வயதாகிறது. ஆகவே சொத்துக்கள் வாங்கிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சொத்துக்கள் பரம்பரை சொத்துக்களாகும். எந்த தேதியில் யாரிடம் எப்படி யார் வாங்கினார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால் என் தாத்தா வாங்கியது. எல்லோரும் ஒன்றாக இருந்தபோது வாங்கியது. வழக்கில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். 04.12.1996 ல் என் தாத்தா முதலிகருப்பன் க.ச.142/1, 141/3, 138/4, பி செட்டியூல் அயிட்டம் 1, 2, 3 காலைகளை செல்வராஜ் என்பவருக்கு 5.62 ஏக்கர் விற்றுவிட்டார் என்கிற விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு விற்கவில்லை. அந்த பூமிகளை வாங்கி ரங்கா நகர் என்று சைட் போட்டு விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த பூமிகளில் தற்போது வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் அதில் ரோடு போடப்பட்டு மனைகள் உள்ளது. அதில் ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. அந்த பூமிகளை விற்றது என் தாத்தாதான் என்றும் தற்போது அதை நான் மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். என் அப்பா சிறுவயதில் இருந்தே என் தாத்தாவுடன் இல்லை என்றும் தனியாகதான் வாழ்ந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் தாத்தாவுடன் கூட்டுப்பன்னையமாகத்தான் இருந்தார். தாவா ஏ செட்டியூல் 3 வது அயிட்ட சர்வே எண். 152/2, பி செட்டியூல் 7, 8 அயிட்ட சொத்துக்கள், 2 ம் பிரதிவாதி கருப்பசாமிக்கு 20.09.1996 தேதியில் அவருடைய சித்தப்பா சிந்த கருப்பனிடம் இருந்து விலைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல. என் தாத்தா ஒரு

செட்டியாருடன் சேர்ந்து பருத்தி, கடலை ஆகிய வியாபாரங்கள் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு யாரும் இல்லை. அதுபோக விவசாயிகளிடம் தட்டு வாங்கி திருப்பூர் கொண்டு சென்று வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி வாங்கி சொத்துக்கள் அனைத்தும் அவருடைய சுய சம்பாத்தியத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துக்களில் இருந்து வருமானம் வந்தது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தாவுக்கு பூர்வீகத்தில் இருந்து எத்தனை ஏக்கர் வந்தது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது. ரங்கவளையனுக்கும் பாட்டவளையனுக்கும் ஆளுக்கு பாதி. பாட்டவளையனுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். பாட்டவளையன் சொத்தில் என் தாத்தாவிற்கு பாதி சொத்து வந்தது. பாட்டவளையன் சம்பாதித்த சொத்தை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. பாட்டவளையன் எந்த காலையில் எத்தனை ஏக்கர் வாங்கினார் என்றால் எனக்கு படிப்பறிவில்லாததால் தெரியாது. பாட்டவளையனும் ரங்கவளையனும் சேரந்து 1 ¼ ஏக்கர் கிரையம் வாங்கினார்கள். அந்த சொத்தை அவர்கள் இருவரும் விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. என் பாட்டி அம்மாசையம்மாள் பெயரில் எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் எனக்கு படிப்பறிவில்லாததால் தெரியாது. அந்த சொத்தை என் பாட்டி என்ன செய்தார் என்றால் என் பாட்டிக்கு புத்தி சரியில்லை. அவர் பைத்தியம். அப்படி இருக்க ஆதாரம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை. பூண்டி கோவிலில் விட்டு இருந்தேன். அங்கு ஆதாரம் உள்ளது. என் பாட்டி இறக்கும் வரை நல்ல நிலையில்தான் இருந்தார் என்றறும் வழக்கிற்காக அவர் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 19.09.2006 தேதியில் பாட்டி அவருக்கு பாத்தியப்பட்ட 144 காலையில் 96 ¼ செண்ட்ம், 143 காலையில் 73 ½ செண்ட்ம், ஆக 1.69 ¾ ஏக்கரை 2 ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரம் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல.19.09.2006 தேதியில் என் தாத்தா முதலிகருப்பன் செம்பியநல்லூர் கிராமத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட 3.85 ¾ ஏக்கரை 2 ம் பிரதிவாதிக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. 20.09.2006 தேதியில் சி செட்டியூலை பொறுத்து 2 ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உயில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஆகியவைகளை ஏற்றுக்கொண்டு 2 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு பக்கவாதம்

ஏற்பட்டதாக சொல்வதற்கு மருத்துவம் செய்தோமா என்றால் லோகேஸ் மருத்துவரிடம் மருத்துவம் பார்த்தோம். அதற்குண்டான ஆதாரங்கள் உள்ளதா என்றால் மருத்துவர் இறந்துவிட்டார். அவர் வீட்டிற்கே வந்து வைத்தியம் பார்ப்பார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்படவில்லை. அவர் கந்தம்பாளையத்தில் இறந்தார். அவர் இறக்கும் போது என் அக்கா உடன் இருந்தார். இந்த வழக்கில் சொல்லியுள்ள சொத்துக்களை பொறுத்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் அதனால் தான் 1996 ல் விற்ற சொத்துக்களையும் சேர்த்து குடும்பத்திற்கு பாத்தியப்படாத சொத்துக்களையும் சேர்ந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களின் உரிமையான நபர்களை சேர்க்காமல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த சொத்து சம்பந்தமாக வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் தாத்தா பெயரில் உள்ளது. சொத்துக்களை நானும் என் அக்கா தங்கைகள் அனுபவித்து வருவதற்கு எதாவது ஆதாரங்கள் உள்ளதா என்றால் விவசாயம் ஒன்றாகத்தான் உள்ளது. வழக்கிற்காக தாவா சொத்துக்களில் கூட்டுசுவாதீனத்தில் உள்ளதா பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா தாவா சொத்தில் இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தஒரு பங்கு பாத்திய உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ளபடி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்.சாவித்திரி

*Take down by/before me in*
*open court read over/interpreted*
*to the witness in the presence of the*
*pleader and admitted by the witness*
*to be correct.*
-Sd-S.Prabha Chandran-
Sub Judge,
*Avinashi.*